தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 6, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2027

1996 ஆகஸ்ட் 21, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி **இளம்வழுதி** *அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

புறத்தின் இருளைப் போக்கும் விளக்குகளைவிட அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை எனும் விளக்கே ஒருவனை உயர்ந்தோன் எனக் காட்டும் ஒளிமிக்க விளக்காகும்.

1. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 184, மாண்புமிகு திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

184—

பகுத்தறிவை வளர்த்திடும் பாடங்கள்

***21–திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

53/371—1a

[1996 ஆகஸ்ட் 21

பாடநூல்களில் பகுத்தறிவை வளர்த்திடும் வகையில் பாடங்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மாணவர்களுக்கு 8 மற்றும் 10 வகுப்பிற்குப் பாடநூல்கள் அடுத்த கல்வியாண்டிற்கு 1997-98-க்கு இப்போது எழுதப்பட உள்ளன. மற்ற வகுப்புப் பாடநூல்கள் ஏற்கெனவே வெளிவந்துவிட்டன. இந்த 8 மற்றும் 10-ஆம் வகுப்புப் பாடநூல்களில் பகுத்தறிவுக் கருத்துக்கள் அடங்கிய பாடங்கள் இடம்பெறச் செய்வது குறித்து பாடநூல் குழுவினருடன் கலந்து ஆலோசனை செய்யப்படும்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறியாமை இருள் அகற்றி அறிவொளி ஏற்றிட, வளமான சமுதாயத்திற்கு வழிகாட்டும் விதமாக, துவக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி ஆகியவற்றில் மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண் அடிமை ஒழிப்பு, மனிதநேய வளர்ப்பு என்கின்ற அடிப்படையில் திராவிடர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மாண்புமிகு முதல்வர் பேரறிவாளர் தலைவர் கலைஞர், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஆகியோரது கட்டுரைகள், சிறுகதைகள் அதேபோன்று பாவேந்தன் பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மாண்புமிகு முதலமைச்சர் அருங்கவி தலைவர் கலைஞர் ஆகியோருடைய பகுத்தறிவுச் சிந்தனைகள், கவிகள் மற்றும் சிந்தனையாளர்களுடைய கவிதைகள், மேனாட்டு சிந்தனையாளர்களுடைய கருத்தாய்வுகள் ஆகியவற்றைப் பாடநூல்களில் சேர்த்திட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு சுமைகளையும் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தாங்காது. ஒவ்வொரு வகுப்புப் பாடத்திலேயும், ஒன்றிரண்டு கருத்துக்கள் உரிய அளவில், தகுந்த முறையில் இடம்பெறச் செய்ய முயற்சிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்கத்திலிருந்து உயர்கல்வி வரையிலும் பாடநூல்களில் அறிவியல்பூர்வமான, சாதிமத உணர்வுகளுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட குழந்தைகளை உருவாக்குகின்ற வகையில், உயர் பகுத்தறிவு

1996 ஆகஸ்ட் 21]

நிறைந்த கருத்துக்களை உருவாக்குவதற்காக ஒரு கல்வியாளர்கள் குழுவை அமைத்து எத்தகைய உத்திகளில் அத்தகைய பாடங்களை உருவாக்கலாம் என்பதைப்பற்றி ஆராய்கின்ற முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் அவர்களுடைய அறிவாற்றலை மேற்படிப்புக்குத் தேவையான முறையில் வளர்க்க வேண்டுமென்பதை ஒரு குறிக்கோளாகக் கொண்டு, படிப்புத் திறன், புரிந்து கொள்கிற திறன் இவைகளை வளர்ப்பதற்கான முறையில் ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அவ்வகையில் பாடத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறிவு வளர்ச்சியே பகுத்தறிவுக்கு அடிப்படை. எனவே அறிவு வளர்வதற்கான பல கடமைகளை அறிவியல் துறை மூலமாக நிறைவேற்றுகின்றபோது பகுத்தறிவு தானாகவே இடம்பெறுகிறது. மூடநம்பிக்கை ஒழிப்பு என்கின்ற அடிப்படையில் பாரதியார் போன்ற பெருமக்கள் சொல்லியிருக்கின்ற கருத்துக்கள் அவ்வப்போது இடம்பெற்று வருகின்றன. மூடநம்பிக்கை ஒழிப்பு என்பதன் பேரால் எழுதப்பட்ட சில கதைகளில் கூட ஒன்றிரண்டு கருத்துக்கள் எதிர்ப்புக்கு உரியனவாகின்றன. புதுமைப்பித்தன் அவர்களால் பல ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட 'செவ்வாய் தோஷம்' என்ற கதை ஒரு பாடநூலிலே இடம் பெற்றிருந்தது. அந்தக் கதையிலே சமுதாய நிலையைச் சித்தரிப்பதற்காக பள்ளன் என்றும் வெட்டியான் என்றும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைக் குறிக்கின்ற சொற்கள் இடம் பெற்றிருந்தன. மூட நம்பிக்கை ஒழிப்புக்காக எழுதப்பட்ட கதை அது. ஆனால் இந்தச் சொற்கள் வருகின்ற காரணத்தினாலே, ஜாதிப் பெயர்கள் வருகின்ற காரணத்தினாலே அதற்கு எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இதனால் பல மாறுபட்ட கருத்துக்கள் வருவதற்கும் வாய்ப்புகள் தோன்றுகின்றன. எனவே, நிலைமைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப, அவசியத்திற் கேற்ப, இது கருதப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி

•

முற்பகல் 9-35

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாடநூல்களில் தந்தைப் பெரியாரின் சீர்திருத்த எழுத்துக்களைப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1996 ஆகஸ்ட் 21

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், சில ஆசிரியர்கள் எழுதிய பழைய பாடங்கள் திரும்ப வருகின்ற போது, சில எழுத்துக்கள் மாற்றியமைக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. அது பரிசீலிக்கப்பட்டு முறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 185, திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்

185—

பொது நூலகம் அமைத்தல்

***247–திரு. கு. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி தொகுதி, செங்கோட்டை வட்டம், கட்டளைக்குடியிருப்பு, தென்காசி ஒன்றியம், ஆயிரப்பேரி கிராமம், பாட்டப்பத்து ஆகிய இடங்களில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

இந்தக் கிராமங்களில் முழுநேர நூலகம் அமைக்க தற்சமயம் தகுந்த வழியில்லை, இருப்பினும் இந்தக் கிராம மக்கள் திருநெல்வேலி மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டு பகுதி நேர நூலகம் திறப்பதற்குத் தேவையான முன் நிபந்தனைகளை அந்தக் கிராமங்களில் பூர்த்தி செய்து தர முன்வருவார்களேயானால் உடனடியாக அந்தக் கிராமங்களில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

திரு. கு. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலுள்ள பொது நூலகத்தில் கடந்த இரண்டு மாத காலமாக நூலகர் இல்லாத காரணத்தால், நூலகம் மூடிக் கிடக்கிறது. அங்கே நூலகரை உடனடியாக நியமித்து அந்த நூலகம் இயங்கச் செய்வதாக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அமைக்கப்பட்டு, நடைபெற்று வந்த நூலகங்கள் தற்போது இயங்காமல் இருக்குமேயானால், அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS